கின்றன. ஆகவே, ஜனநாயகத்தில் வெளிநடப்பு செய்வது என்பது இப்பொழுது பல தடவை வந்துகொண்டிருக்கிறது. திரு. அனந்த சயனம் ஐயங்கார் அவர்கள் பலதடவை இதைப்பற்றி சொல்லியிருக்கிருர்கள். வெளிநடப்பு செய்வதற்கு முன்னுல் தலைவர்கள் ஏன் வெளிநடப்பு செய்கிருர்கள் என்பதற்கான சில காரணங்களைச் சொல்கிருர்கள். அங்கே போய் உட்கார்ந்து அங்கே வேறு எந்தக் காரியத்தையும் எடுத்துப் பேசுவதற்கு முடியவில்லை என்று அழுத்தமாகப் பேசுவதையே அவர்களுக்குத் தெரிந்த முறையில் சொல்லியிருக்கிருர்கள். வெளியிலே இருந்துகொண்டு சட்டசபையை பாய்காட் செய்வதற்கான காரணங்களைச் சொல்லுகின்ற முறையில் அண்ணு தி.மு.க. தலைவர் அவர்கள் இந்த அறிக்கையை விடுத்திருக்கிருர்கள் என்று கூறிக்கொண்டு, நான் அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் "இந்த அவை செத்து விட்டது" என்று பத்திரிகைகளுக்கு அளித்த அறிக்கையை ஒட்டி உரிமைப் பிரச்னை ஒன்றினை இங்கே கொண்டு வந்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இதிலே எடுத்துக் கூறியிருக்கிருர்கள். நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் "இந்தத் தீர்மானத்தை முழுமையாக எதிர்க்கின்றேன்" என்று குறிப்பிட்டார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், அவர் அவருக்குத் தெரிந்த வார்த்தையை பயன் படுத்திவிட்டார் என்று குறிப்பிட்டு, அவருக்கு இப்படித்தான் சொல்லத் தெரியும் என்ற நிலையை இங்கே புலப்படுத்தியிருக்கிருர்கள். அதிலே உரிமைப் பிரச்னை இருக்கிறதா, இல்லையா என்கின்ற ஆராய்ச்சியில் நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லா விட்டாலும், "மறப்போம் மன்னிப்போம்" என்று அவர்கள் கூறிய திலிருந்து, மன்னிப்பது என்பது குற்றம் செய்தவர்களைத்தான் மன்னிக்க முடியும். ஆகவே "மன்னிப்போம்" என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கிருர்கள். குற்றம் செய்தார், எனவேதான் மன்னிப்போம் என்று அவர்கள் கூறியதிலிருந்து, உரிமைப் பிரச்சினை இருக்கிறது என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிருர்கள்.

இந்த அவை செத்துவிட்டதா, இல்லையா என்பதை நாடு நன்ருக உணர்ந்திருக்கிறது. டாக்டர் ஹாண்டே கூட அழகாகச் சொன்னுர் கள். செத்து இருந்தால், எப்படிச் சண்டை போட முடியும் என்று

அவர்கள் கேட்டார்கள். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு டாக்டர் ஹாண்டே அவர்களே சரியான மறுப்பை இப்பொழுது அவையிலே கொடுத்திருக்கிறார்கள் என்று தான் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். இது உயிரோடு இருக்கிறது. அது மாத்திர மல்ல. அவர்களே கூட நேற்று சில பேர்களை அனுப்பி உயிரோடு இருக்கிறதா, இல்லையா என்று பார்த்துவரச் சொல்லி, உயிரோடு இருக்கிறது என்ற செய்தியைத் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக, நேற்று ஒரு நாளைக்குக்கூட எம்.ஜி.ஆர். கட்சியினர்கள்—அண்ணா தி.மு.க.-வினர்கள் இந்த அவைக்கு வந்ததன் மூலம் இந்த சட்டசபை சாகவில்லை என்பதை அவர்களும் ஒரு வழியிலே ஒத்துக்கொண்டிருக் கிறார்கள். சில பேர் தங்களுக்கு ஏதாவது வந்துவிட்டால் அது உலகத்துக்கே வந்துவிட்டதாக கருதுகிற பரந்த நோக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கதை சொல்வார்கள். ஒரு நரி நட்டாற்றில் அடித்துக்கொண்டு போகப் படும்பொழுது சத்தம் போட்டதாம். "உலகம் போயிற்று, உலகம் போயிற்று" என்று கத்தியதாம், உலகம் போயிற்று, உலகம் போயிற்று என்று கத்துகிறதே என்று கரையில் நின்றவன் அவசர மாக ஓடி அந்த நரியைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்து "உலகம் போயிற்று, உலகம் போயிற்று" என்று சொன்னாயே, ஏன்? என்று கேட்டானாம். நரி சொன்னதாம். "நான் ஆற்றோடு போய் செத்துப்போயிருந்தால், என்னைப் பொறுத்தவரையில் உலகம் போயிருக்கும் அல்லவா" என்று நரி சொன்னதாம். அதைப்போலவே சில பேர் தங்கள் தங்களைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் செத்துப் போய்விட்டது என்று, மற்றவர்களைப் பார்த்து, ஒரு அவையைப் பார்த்து "செத்துப்போய் விட்டது" என்று கூறுகிறார்கள்.

ஆகவே, இங்கே பேசியவர்களெல்லாம் எடுத்துக் காட்டியதில் ஒன்றை நான் ஒத்துக்கொள்கிறேன். இந்த அவையைப் பற்றி விமர் சிக்கின்ற உரிமை உறுப்பினர்களுக்கு இருக்கிறது. ஆனால் எந்த வகையில் விமர்சிக்க வேண்டும் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. மாண்புமிகு அவை முன்னவர் இங்கே கேட்டது போல, இந்த அவையே செத்துவிட்டது என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோமா, நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்று அவர்கள் இங்கே கேட்டார்கள். அதை யாரும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 பிப்ரவரி 6

திரு. வீராசாமி அவர்கள் கொண்டு வந்தது உரிமைப் பிரச்னைக்கு உரியது தான் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. இருந்தாலும், நண்பர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நடித்த ஒரு படத்தில்—நானே அதற்கு கதை எழுதியிருக்கிறேன்—"செத்து பிழைத்தவன்டா" என்று பாட்டு பாடியிருக்கிறார். இந்த அவையைப் பொறுத்த வரையில் நேற்று வரையிலே அவர்கள் செத்துப் பிழைத்திருக்கிறார்கள். பிழைத்தவர்கள் தொடர்ந்து வாழ்வார்களா, மறுபடியும் செத்து விட்டது என்று சொல்லி சபைக்கு வராமல் இருப்பார்களா என்று நமக்குப் புரியாது. இருப்பினும், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் கூறியிருப்பது போல,—"ஃபர்கெட் அண்டு ஃபர்கிவ்". என்று சொன்னார்கள். "மறப்போம், மன்னிப்போம்" என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்ட நேரத்தில் என்னுடைய தலைவர் அண்ணா அவர்களின் ஞாபகம் தான் எனக்கு வருகிறது. பல நேரங்களில் அண்ணா அவர்களின் பயன்படுத்துகிற அந்தச் சொல் "மறப்போம், மன்னிப்போம்" என்பதாகும். குற்றம் உடையதாக இருந்தாலும், உரிமைப் பிரச்னைக்கு உரியதாக இருந்தாலும், இது உரிமைப் பிரச்னைக்கு உரியது அல்ல என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் வாதாடிய முறையில் வாதாடாமல், உரிமைப் பிரச்னைக்கு உரியது என்பதை ஒத்துக்கொண்டு, மறப்போம், மன்னிப்போம் என்ற அண்ணா அவர்களின் வாசகத்திற்கேற்ப, இந்த ஒரு முறை மறந்து, மன்னித்து உரிமைப் பிரச்னைக் குழுவிற்கு இதை அனுப்ப வேண்டாம் என்கின்ற கருத்தை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மிஸ்டர் டெப்யூடி ஸ்பீக்கர், சார், இந்தப் பிரச்னை உரிமைப் பிரச்னைக்கு உரியதா என்பதைப்பற்றி இங்கே பல கட்சியினர்கள் வாதாடிக்கொண்டிருக்கிறோம். ஒரு சட்ட சபை அங்கத்தினர் சட்டசபை செத்துவிட்டது என்று சொன்னது உரிமைப் பிரச்னை என்று கூறப்படுகிறது. சாதாரணமாக ஜனநாயகத்தில், எனக்கு முன்பு பேசியவர்கள் சொன்ன மாதிரி, இப்படிப் பட்ட வார்த்தைகளையெல்லாம் நாம் அதிகமாக பெரிதுபடுத்திக் கொண்டு இருக்க முடியாது. பத்திரிகைகளும், மற்றவைகளும் சரி, விளம்பரத்திற்காக ஜனநாயக இன்ஸ்டிடியூஷன் என்ற முறையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அங்கு, இங்கு இருக்கிற ஒன்று, இரண்டு வார்த்தைகள் தவறிப்போனால், அதைப் பெரிது படுத்திக் கொண்டு, அதற்கெல்லாம் உரிமைப் பிரச்னை என்று கொண்டுவந்து